1974 சனவரி 19]

திட்டம் ஆகிய திட்டங்களில் பல இடங்களில் கட்டப்படும் வீடுகளை ஒதுக்கீடு செய்துகொள்ள விண்ணப்பம் செய்து கொள்ளும்படி வீட்டு வசதி வாரியத்தால் இவ்வாசிரியர் கழகம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு குடியிருப்புக்கள் கட்டித் தர இயலாது என்று குடிசை மாற்று வாரியத்தால் இவ் வாசிரியர்க்கழகம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: இவர்கள் வேலை செய்யும் பள்ளிகளின் பக்கங்களில் கட்டடம் கட்டிக் கொடுப்பது வசதியாக இருக்கு மாதலால் இதுப்பற்றிப் புனர் பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இதைப் பொருத்தவரை சென்னை நகரத்தில் இருக்கும் தமிழாசிரியர் கழகத்தினர் கேட் டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் பள்ளிகளுக்குப் பக்கத்தில் இடம் கிடைப்பது கடினம். இடத்தை வாங்கித் தந்தால் கட்டடம் கட்டிக் கொடுக்க வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: குடிசைமாற்று வாரியம் ஆங்காங்கு பல கட்டடங்களைக் கட்டி அந்தப் பகுதியில் குடிசை களில் இருந்தவர்களுக்குக் கொடுக்கிறது. அதிலே கொஞ்சம் அதிகமான வீடுகளைக் கட்டி இதுபோன்ற அரசாங்க சிப்பந்தி களுக்கும் சில வீடுகளைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அந்த முறையும் கையாளப் பட்டு வருகிறது. குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டப் படும் வீடுகளில் அதிகப்படியான வீடுகள் கட்டப்பட்டால் 250 ரூபாய்க்குக் குறைவாக மாதச் சம்பளம் வாங்குகிற ஊழியர் களுக்குத் தரப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: குடிசை மாற்று வாரியமும், வீட்டு வசதி வாரியமும் அதிகமாகச் சென்னை நகரத்தில்தான் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களில் செயல்பட அதிகப் பணம் அரசாங்கம் ஒதுக்குமா?

[1974 சனவரி 19

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் குடிசை மாற்று வாரியம் என்ற ஒரு வாரியத்தை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். மாவட்டத் தலைநகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடிசைமாற்றுப் பணிகளைச் செய்வதற்கு ஓரளவு பணம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டியில் வீட்டு வசதி வாரியப் பிரிவு.

*27 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் வீட்டு வசதி வாரியத்தின் கிளை ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. நா. வெ. குருசாமி : ஆண்டிப்பட்டியில் சுமார் 15,000 மக்கள் வசிக்கிறார்கள். அங்கு வீட்டு வசதி வாரியத்தின் கிளை ஒன்றை ஏற்படுத்தி அங்குள்ள வீடு இல்லாத மக்களுக்கு மலிவான வகையில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆண்டிப்பட்டி என்பது ஒரு சின்ன சிற்றூர். அதற்கு வீட்டு வசதி வாரியத்தின் வேலைகள் எவ்வளவு தேவைப்படும் என்று எனக்கு தெரியவில்லை. அவர்களது கேள்வியில், வீட்டு வசதி வாரியத்தின் அலுவலகம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். வீடுகள் கொஞ்சம் அளவு கட்டவேண்டுமென்றால் மதுரையில் உள்ள வாரிய அதிகாரிகளை அணுகினால் அல்லது மற்ற வீட்டு வசதி வாரியம் அதிகாரிகளை அணுகினால் வீடுகள் கட்டித்தர வீட்டு வசதி வாரியம் தயாராயிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. In the English list of questions, the question No. 28 is not in proper form. Something is omitted. " Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the appointment . . . . . " 'whether' has been omitted. What is the meaning of this question ?

'வெதர்' என்பது விட்டுப்போயிருக்கிறது. க்வஸ்டினின் பாரம் சரியாகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்திக்கொள்ளலாம்.